மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, State Council for Higher Education என்பது ஒரு Administrative Body கிடையாது, அது Advisory Body. ஆக அந்தமாதிரி நம்முடைய பல்கலைக்கழகங்களுக்கெல்லாம் ஒரு பரஸ்பரம் இருக்க வேண்டும். பொதுவான பாடத்திட்டத்தை எப்படி செயல்படுத்த வேண்டும் என்பதற்கான சில அறிவுரைகளை வழங்குவதற்காக, அத்தோடு பல்கலைக்கழக துணைவேந்தர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து இவர்களுக்காக ஏற்படுத்தப்பட்ட நிலையிலேதான் இருக்கிறதேயொழிய அது ஒரு Administrative body என்று சொல்கிற நிலையில் இல்லை என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

6. அறிவிப்புகள் – *தொடர்ச்சி*

(ஈ) இங்கிலாந்து பாராளுமன்ற பிரபுக்கள் சபை உறுப்பினர் லார்டு டேவிட் லீ பேரவைத் தலைவர் மாடத்திலிருந்து அவை நடவடிக்கைகளைப் பார்வையிடல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒரு செய்தியைச் சொல்ல விரும்புகிறேன். இங்கிலாந்து பாராளுமன்றத்தின் பிரபுக்கள் சபையிலிருந்து லார்டு டேவிட் லீ தற்சமயம் சென்னைக்கு வருகை புரிந்துள்ளார். அவர் இப்போது பேரவைத் தலைவர் மாடத்திலிருந்து அவை நடவடிக்கைகளை பார்த்துக் கொண்டிருக்கிறார். அவரை வரவேற்கும்முகத்தான் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 4–35

" I am pleased to inform Hon'ble Members of this House that this Assembly is privileged to receive Lord David Lea of Crondall, Member of Commonwealth Parliamentary Association of United Kingdom who is on a visit to Chennai and is presently in the Speaker's gallery witnessing the proceedings of the Assembly."